# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol : 01 | Issue : 62 | 4 Pages | 02.10.2023 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 62 | 4 பக்கங்கள் | 02.10.2023 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## குறைந்த ஓட்டில் தோற்ற 160 தொகுதிகள் உட்பட பாஜகவில் உத்தேச வேட்பாளர்கள் பட்டியல் தேர்வு: 10 பேர் கொண்ட தேர்தல் குழு நியமனம்



புதுடெல்லி, அக். 2

மக்களவை தேர்தலுக்காக பாஜக சார்பில் போட்டியிடும் உத்தேச வேட்பாளர்கள் பட்டியலை தேர்வு செய்ய 10 பேர் கொண்ட தலைவர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. அடுத்தாண்டு ஏப்ரலில் நாடாளுமன்ற மக்களவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஆளும் பாஜக கூட்டணி தேர்தல் வேலைகளில் தீவிரம் காட்டி வருகிறது. மாநிலம் வாரியாக தேர்தல் கூட்டணி, வேட்பாளர் தேர்வு, பிரசார யுக்திகள் குறித்து ஆலோசனைகளை நடத்தி வருகிறது.

இதுகுறித்து பாஜக தேசிய தலைவர்கள் கூறுகையில், 'நாடு முழுவதும் 543 மக்களவை தொகுதிகளிலம் பாஜகவின் செல்வாக்கு குறித்தும், வெற்றி வாய்ப்பு குறித்தும் ஆய்வு நடத்த தேசிய பொதுச் செயலாளர் சுனில் பன்சால் தலைமையில் 10 தலைவர்கள் கொண்ட குழுவை தேசிய தலைமை அறிவித்துள்ளது. அவர்கள் மாநிலம் வாரியாக சென்று, மக்களவைத் தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான வாய்ப்புகள் குறித்து ஆய்வு செய்வார்கள். குறிப்பாக வேட்பாளர்களையும் அடையாளம் காண்பார்கள். வரும் டிசம்பர் 1ம் தேதிக்குள் வேட்பாளர்கள் தொடர்பான அறிக்கையை கட்சித் தலைமையிடம் ஒப்படைப்பார்கள்.

கட்சியின் முன்னாள் துணை முதல்வர் தினேஷ் சர்மா, இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக செயல்படுவார். உத்தரபிரதேசம், ராஜஸ்தான், பீகார், மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், மத்திய பிரதேசம் போன்ற பெரிய மாநிலங்களில் அதிக கவனம் செலுத்தப்படுவதால், அம்மாநில நிர்வாகிகளுடன் ஆலோசனைகளை நடத்தி உத்தேச வேட்பாளர்கள் பட்டியல் தேர்வு செய்யப்படும். பெரிய மாநிலங்களில் டிசம்பர் 1ம் தேதிக்குள்ளும், சிறிய மாநிலங்களில் ஜனவரி 1ம் தேதிக்குள்ளும் வேலைகளை முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## ஆந்திராவில் விநாயகர் ஊர்வலத்தில் தீ வைத்து நடனமாடிய போது தீ விபத்து: 6 சிறுவர்கள் உட்பட 8 பேர் காயம்!




ஆந்திரா, அக். 2

ஆந்திராவில் விநாயகர் ஊர்வலத்தில் காந்தார பாடலுக்கு சுற்றிலும் தீ வைத்து நடனமாடிய போது தீ விபத்து ஏற்பட்டபோது 6 சிறுவர்கள் உட்பட 8 பேர் காயமடைந்துள்ளனர். ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டம் ஜம்மலமடுகு மண்டலம் எரகுண்ட்லா பகுதியில் நேற்று இரவு விநாயகர் விசர்ஜனம் செய்ய ஊர்வலமாக விநயாகர் சிலை கொண்டு செல்லப்பட்டது.

அப்போது ஆடல் பாடல்களுடன் நாட்டுப்புற கலைஞர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது நாட்டுப்புற கலைஞர்கள் காந்தாரா படத்தில்வருவதுபோன்றுவராகரூபம்படாலுக்குஏற்பஇரண்டுகலைஞர்கள் படத்தில் வருவது போன்று வராக ரூபம் வேடம் அணிந்து சுற்றிலும் தீ வைத்து நடனம் ஆட முடிவு செய்தனர்.

ஒருவர் கலைஞர்களை சுற்றி பெட்ரோல் ஊற்றி தீ வைத்த நிலையில், அங்கு வேடிக்கை பார்க்க வந்த 6 சிறுவர்களுடன் நடனம் ஆட இருந்த கலைஞர்கள் மீதுதீபிடித்துகொண்டது.உடனடியாககாயம்அடைந்தவர்களைஜம்மலமடுகு அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதில் இருவரது நிலையும் கவலைக்கிடமாக உள்ளது. விநாயகர் ஊர்வல கொண்டாட்டத்தில் அலட்சியத்தால் தீ விபத்து நடந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## குன்னூர் பேருந்து விபத்து சம்பவத்திற்கு குடியரசு தலைவர் திரௌபதி முர்மு இரங்கல்

டெல்லி, அக். 2

குன்னூர் பேருந்து விபத்து சம்பவத்திற்கு குடியரசு தலைவர் திரௌபதி முர்மு இரங்கல் தெரிவித்துள்ளார். தென்காசி மாவட்டம் பொட்டல்புதூர் அருகில் கடையம் கிராமத்தில் இருந்து 54 பேர் சுற்றுலா பேருந்து ஒன்றில் ஊட்டிக்கு சுற்றுலா சென்றனர். அங்கு சுற்றிப்பார்த்துவிட்டு, ஊருக்கு திரும்பிக்கொண்டிருக்கும்போது, குன்னூர் அருகே, 50 அடி பள்ளத்தில் சுற்றுலாப் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 9 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் 30க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து நிகழ்விடத்துக்கு சென்ற மீட்புப்படையினர் மற்றும் போலீசார், பேருந்து கவிழ்ந்த இடத்தில் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனிடையே குன்னூர் பேருந்து விபத்தில் பலி எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது. குன்னூர் பேருந்து விபத்து சம்பவத்திற்கு பிரதமர் மோடி, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், குன்னூர் பேருந்து விபத்து சம்பவத்திற்கு குடியரசு தலைவர் திரௌபதி முர்மு இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் பேருந்து விபத்துக்குள்ளானதில் பலர் உயிரிழந்தது மிகுந்த வேதனை அளிக்கிறது. அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்தஇரங்கலைதெரிவித்துகொள்வதுடன்,காயமடைந்தவர்கள்விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 96வது பிறந்தநாள்: அவரது திருவுருவ படத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை

சென்னை, அக். 2

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 96வது பிறந்த நாளை ஒட்டி, அவரது உருவ படத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். நடிகர்திலகம் சிவாஜி கணேசனின் 96வது பிறந்தநாள் கொண்டாடப்படுதையொட்டி, சென்னை அடையாறில் உள்ள அவரது மணிமண்டபத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள சிவாஜி கணேசனின் சிலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

மேலும் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது புகைப்படத்திற்கும் மலர்தூவி மரியாதைசெலுத்தினார். முதலமைச்சருடன் அமைச்சர்கள் துரைமுருகன், சாமிநாதன், சென்னை மேயர் பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நடிகர் பிரபு, அவரது மகன் விக்ரம் பிரபு ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். மணிமண்டபத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நடிகர் பிரபு வரவேற்றார்.



பின்னர் செய்தியாளர்களை சந்தித்த நடிகர் பிரபு கூறியதாவது: மூன்று வருடங்களாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் வந்து மரியாதை செலுத்தி வருகிறார். அதற்கு என் தந்தை மீது உள்ள பாசம் தான் காரணம். கருணாநிதி , எம்ஜிஆர், சிவாஜி கணேசன் என மூவரின் சிலையும் ஒரே இடத்தில் இருப்பது அவர்களின் ஒற்றுமையை காட்டுகிறது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் கலைமாமணி, பத்மஸ்ரீ, பத்மபூஷன், உள்பட பல விருதுகளை பெற்றுள்ளார். பராசக்தி திரைப்படத்தின் வாயிலாக வெள்ளித்திரையில் அறிமுகம் ஆன சிவாஜி கணேசன் தனது நடிப்பு திறமையால் ரசிகர்களை கட்டிப்போட்டார். இதனால்தான்அவர் மறைந்து 20 வருடங்களை கடந்த பின்னரும் அவரை தலைமுறைகள் தாண்டி ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர் என்று கூறியுள்ளார்.

# குற்றாலம் அருவியில் குளிக்க தடை.. விடுமுறைக்கு குவிந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்

தென்காசி, அக்.2

குற்றாலம் மெயின் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் பாதுகாப்பு கருதி பொதுமக்கள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. காலாண்டு விடுமுறை விடப்பட்டுள்ளதால் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் குற்றாலம் வந்திருந்தனர். குளிக்க தடை விதிக்கப்பட்டதால் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில், கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால், குற்றாலத்தில் இதமான சூழல் நிலவியது. குற்றாலம் பேரருவி மற்றும் ஐந்தருவியில் தண்ணீர் சீராகக் கொட்டியது. இதன் காரணமாக, சுற்றுலாப் பயணிகள் குற்றாலத்திற்கு வருகை புரிந்து வந்தனர். குறிப்பாக, காலாண்டு விடுமுறை மற்றும் இந்த வார தொடர் விடுமுறை காரணமாக அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகையால் குற்றாலம் மீண்டும் களை கட்டி, வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.



மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. தமிழ்நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களிலும் கனமழை பெய்து வருகிறது. திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களில் நல்ல மழை கொட்டித் தீர்த்து வருகிறது. இதனால், நேற்று முதல் மெயின் அருவில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குற்றாலம் மெயின் அருவி மற்றும் ஐந்தருவியில் பொதுமக்கள் குளிக்க நேற்று தடை விதிக்கப்பட்டது.

இதையடுத்து, ஏமாற்றமடைந்த சுற்றுலா பயணிகள், மற்ற அருவிகளில் குளித்து மகிழ்ந்தனர். இன்று காலையில் மெயின் அருவில் வெள்ளப்பெருக்கு குறைந்ததால் மீண்டும் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டனர். பாதுகாப்பு கருதி அருவியின் ஒரு பகுதியில் மட்டும் குளிக்க அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில், மீண்டும் மழை பெய்து வருவதால் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் மீண்டும் குற்றாலம் மெயின் அருவி மற்றும் ஐந்தருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் குற்றாலம் சென்ற சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். நீர்வரத்துகுறையும்பட்சத்தில்மீண்டும் மெயின் அருவியில் குளிக்க அனுமதி அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. குற்றாலம் அருவிக்கு குளிக்கச் செல்லும் சுற்றுலா பயணிகள், 9600753806 என்ற எண்ணுக்கு Courtallam என டைப் செய்து வாட்ஸ் அப்பில் மெசேஜ் செய்தால், அன்றைய சீசன் நிலவரம் Tenkasi Life சமூக வலைதள பக்கம் சார்பாக உடனுக்குடன் தெரிவிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# "விரக்தியா? வெறுப்பா?" அரசியலில் என்னை விடுவித்து விட்டால் தோட்ட வேலைக்கு சென்று விடுவேன்: அண்ணாமலை பரபரப்பு பேட்டி

கோவை, அக். 2

அரசியலை விட்டு என்னை விடுவித்து விட்டால் நான் தோட்ட வேலைக்கு சென்று விடுவேன் என்று டெல்லி செல்லும் நிலையில் கோவையில் அண்ணாமலை பேட்டி அளித்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பாரதப் பிரதமரின் தூய்மை பாரத திட்டத்தின் கீழ் இன்று பல்வேறு பகுதிகளில் பாஜகவினர் ஒரு மணி நேரம் தூய்மை பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் அடிப்படையில் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை கோவை கோவில்பாளையம் அடுத்த எஸ்.எஸ்.குளம் பகுதியில் தூய்மை பணியில் ஈடுபட்டார்.

முன்னதாக அவர் நிருபர்களிடம் கூறியதாவது: அரசியலை விட்டு என்னை விடுவித்து விட்டால் நான் தோட்ட வேலைக்கு (விவசாயம்) சென்று விடுவேன். அரசியலில் இருக்க வேண்டும் என்று இருக்கிறேன். ஒரு சில மாற்றங்களை கொண்டு வருவதற்கு அரசியலை ஒரு டூல்சாக பார்க்கிறேன். அரசியலைப் பொறுத்தவரை 70 சதவீதம் நெகட்டிவாகவும், 30 சதவீதம் பாசிட்டிவ்வாக பார்க்கிறேன்.



அரசியல் கொஞ்சம் நெகட்டிவ் அதிகமாக இருக்கக்கூடிய துறை. இதில் கிடைக்கக்கூடிய மாற்றம் என்பது மற்ற துறைகளை காட்டிலும் வேகமாக கிடைக்கும்.

மாற்றத்தை கொண்டு வருவதற்கு அரசியலைத் தவிர வேறு வழி இல்லை என்பதால் அரசியலில் இருக்கிறேன். பொறுத்திருப்போம். காலமும் நேரமும் வரும் வரை நமது பணியை செய்து கொண்டே இருப்போம். என் முன்னிலையில் ரவுடிகள் பாஜவில் இணைவதில்லை. சில பேர் தவறான மனிதராக இருந்தாலும் கூட, தன்னை திருத்திக் கொள்ளும் வாய்ப்பாக அரசியலை பார்க்கின்றனர். அதற்கு பாஜ ஒரு வாய்ப்பை கொடுத்துள்ளது. இவ்வாறு அண்ணாமலை கூறினார்.

தமிழ்நாட்டில் கூட்டணியை அதிமுக முறித்தபிறகு அண்ணாமலை, டெல்லியில் உள்துறை அமைச்சர் அமிஷாவை சந்திக்க கோவையில் இருந்து புறப்பட்டு செல்கிறார்.

தமிழகத்தில் பாஜ தலைமையில் தனி அணியாக போட்டியிட வேண்டும் என அவர் அறிக்கை அளிக்க இருப்பதாககூறப்படுகிறது. அதற்கு முன்பாக அவர் அளித்தபேட்டியில் ''அரசியலில் இருந்து என்னை விடுவித்துவிட்டால் நான் தோட்ட வேலைக்கு செல்வேன் என்று கூறியது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அவர் விரக்தியில் பேசினாரா? அல்லது மேலிட தலைவர்கள் தன் முடிவை ஏற்காவிட்டால், அரசியலில் இருந்து விலகிவிடுவேன் என மிரட்டுவத ற்காக பேசினாரா எனத் தெரியவில்லை.

# இன்று விடுமுறை என்பதால் ஞாயிறு அட்டவணைப்படி மின்சார ரயில்கள் இயங்கும்: சென்னை கோட்டம் அறிவிப்பு


சென்னை, அக். 2

இன்று விடுமுறை என்பதால் ஞாயிறு அட்டவணைப்படி மின்சார ரயில்கள் இயங்கும் என சென்னை கோட்டம் அறிவித்துள்ளது. சென்னை, அரக்கோணம், செங்கல்பட்டு, சூலூர்பேட்டை ஆகிய வழித்தடங்களில் ஞாயிறு அட்டவணைப்படி ரயில் இயக்கப்பட உள்ளது. காந்திஜெயந்தியை முன்னிட்டு நாளை பொதுவிடுமுறை என்பதால் ஞாயிறுஅட்டவணைப்படிரயில்கள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குழிப்பில் தெரிவித்ததாவது:

காந்தி ஜெயந்தி விடுமுறையை முன்னிட்டு நாளை திங்கள்கிழமை சென்ளை புறநகர் மின்சார ரயில் சேவைகள் ஞாயிற்றுக்கிழமை கால அட்டவணைபோல்இயக்கப்படும். சென்னை சென்ட்ரல் – அரக்கோணம், சென்னைசென்ட்ரல் – சூலூர்பேட்டை மற்றும் சென்னை கடற்கரை – செங்கல்பட்டு இடையேயான மின்சார ரயில் வழித்தடத்தில் நாளை பராமரிப்பு பாணிகளும் நடைபெறும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திண்டுக்கல் மாவட்டம் பழனி முருகன் கோயிலில் பக்தர்கள் செல்போன் எடுத்து செல்வதற்கான தடை




திண்டுக்கல், அக். 2


திண்டுக்கல் மாவட்டம் பழனி முருகன் கோயிலில் பக்தர்கள் செல்போன் எடுத்து செல்வதற்கான தடை அமலுக்கு வந்தது. வீடியோ, புகைப்பட கருவிகளை பழனி மலை கோயிலுக்கு எடுத்துச் செல்ல விதிக்கப்பட்ட தடை அமலுக்கு வந்தது. மலை அடிவாரத்தில் ஆங்காங்கே அமைக்கப்பட்ட பாதுகாப்பு அறைகளில் பக்தர்கள் செல்போன்களை வைக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

பழனி முருகன் கோயிலில் பக்தர்கள் செல்போன் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் தங்களது செல்போன் மற்றும் கேமராக்களை பாதுகாப்பாக மலையடிவாரத்தில் ஒப்படைத்துச் செல்ல வசதியாக, கோயில் நிர்வாகம் சார்பில்கைப்பேசிவைப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. ரூ.5 கட்டணம் செலுத்தி, ரசீதை பெற்றுக்கொண்டு பக்தர்கள் செல்போனை இங்கு வைத்துச் செல்லாலாம். பின் மீண்டும் தரிசனம் முடித்த பின், ரசீதை கொடுத்து செல்போனை பெற்றுச் செல்லலாம். இந்தியாவில் உள்ள பிரபல கோவில்களுக்குள் செல்போன் கொண்டு செல்வதற்கு தடை உள்ளது. திருப்பதி ஏழுமலையான் கோவில், கோவிந்தராஜ பெருமாள் கோவில், பத்மாவதி தாயார் கோவில்களுக்குள் செல்போன் கொண்டு செல்ல அனுமதியில்லை. ஆலய நிர்வாகம் சார்பில் செல்போனை பாதுகாக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சாமி தரிசனம் முடிந்த பின்னர் செல்போனை பாதுகாப்பு பெட்டகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.



திருச்சியில் உலக முதியோர் தினத்தில் ஆதரவற்ற முதியவர்களான ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தாய் வீடு உதவும் கரங்கள் சேவை மையம் மற்றும் சமூக ஆர்வலர்கள் சார்பில் மரியாதை செலுத்தி அத்தியாவசிய உதவி பொருட்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

# நாடாளுமன்ற தேர்தலில் வேட்பாளர் தோல்வி அடைந்தால் அந்த மாவட்ட செயலாளர் நீக்கப்படுவார்: முதல்வர் எச்சரிக்கை



சென்னை, அக். 2

நாடாளுமன்ற தேர்தலில் வேட்பாளர் தோல்வி அடைந்தால் அந்த மாவட்ட செயலாளர் நீக்கப்படுவார். தொகுதி பார்வையாளர்களுக்கு சரியாக ஒத்துழைக்காத மாவட்ட செயலாளர்களும் மாற்றப்படுவார்கள் என்று திமுக மாவட்ட செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் ஆலோசனை கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின்தலைமையில் இன்று திமுக கட்சியின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் பங்கேற்கும் ஆலோசனை கூட்டம் நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது.

அதன்படி, இன்று திமுக தலைமை அலுவலகமான சென்னை, அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின்தலைமையில் மாவட்ட செயலாளர்கள்கூட்டம் நடைபெற்றது. வெளியியூரில்இருந்து கலந்து கொள்ளும் கட்சி நிர்வாகிகள் காணொளி வாயிலாக கலந்துகொண்டனர். திமுகவில் மொத்தம் உள்ள 72 மாவட்ட செயலாளர்களும், 234 தொகுதிகளுக்கும் உள்ள தொகுதி பார்வையாளர்களும் இந்த ஆலோசனை கூட்டத்தில் தவறாமல் கலந்துகொள்ள அறிவுறுத்தப்பட்டு இருந்தது. இந்த ஆலோசனை கூட்டத்தில் நாம் எதிர்பார்த்தது போலவே நாடாளுமன்ற தேர்தல் நிலவரம் பற்றி தான் ஆலோசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனை கூட்டத்தில் கட்சி நிர்வாகிகளுடன்முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், நாடாளுமன்ற தேர்தல் இன்னும் சில மாதங்களில் வரவுள்ளதால், விரைந்து செயல்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். கட்சி நிர்வாகிகள் விரைந்து செயல்பட வேண்டும் என்றும், நாடாளுமன்ற தேர்தல் பணி நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது என்றும் முதல்வர் பேசியுள்ளார்எனதகவல்வெளியாகியுளளது.

மேலும் இதில் கட்சி நிர்வாகிகளுக்கு ஓர் முக்கிய எச்சரிக்கை பதிவும் கூறப்பட்டதாக தெரிகிறது. அதவாது, எந்த தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் தோல்வி அடைகிறாராரோ அந்த தொகுதியை சேர்ந்த மாவட்டசெயலாளர்கட்சி பொறுப்பில் இருந்து நீக்கப்படுவார் என்றும் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கட்சி நிர்வாகிகளிடம் கூறியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# பறிபோன 9 உயிர்.. குன்னூர் பஸ் விபத்துக்கு காரணம்: காவல்துறை சொன்ன ஷாக் தகவல்



நீலகிரி, அக்.2

நீலகிரி மாவட்டம் குன்னூரில் நடந்த சுற்றுலா பஸ் விபத்தில் தென்காசி மாவட்டத்தை சேர்ந்த 9 பேர் பலியாகி உள்ளனர். இந்நிலையில்தான்விபத்துக்கான காரணம் குறித்த திடுக்கிட வைக்கும் தகவல் போலீசாரின் அறிக்கையில் இடம்பெற்றுள்ளது. தொடர் விடுமுறை காரணமாக நீலகிரி மாவட்டத்துக்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர். இந்நிலையில் தான் நேற்று இரவு குன்னூர் மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் சுற்றுலா பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. மரப்பாலம் அருகே வளைவில் இந்த சுற்றுலா பஸ் திரும்பியபோது திடீரென்று டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்தது. மேலும் கண்இமைக்கும் நொடியில் பஸ் சாலை தடுப்பு சுவரை இடித்து கொண்டு பள்ளத்துக்குள் பாய்ந்தது. இந்த பஸ்சில் மொத்தம் 59 பேர் பயணித்த நிலையில் அவர் கூச்சலிட்டனர். இதையடுத்து அந்த வழியாக சென்றவர்கள், தீயணைப்பு வீரர்கள் என அனைவரும் மீட்பு பணியில் ஈடுபட்டனர். கயிறு கட்டி பேருந்தில் சிக்கியவர்களை மீட்டனர். அப்போது சம்பவ இடத்தில் 3 பேர் பலியானது தெரிய வந்தது.

மேலும் 40க்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தது தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் மீட்டு அருகே உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு 6 பேர் பலியாகினர். இதனால் பலி எண்ணிக்கை என்பது 9 ஆக அதிகரித்தது. மேலும் விபத்து குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். அப்போது தென்காசி மாவட்டம் கடையம் பகுதியை சேர்ந்தவர்கள் ஊட்டிக்கு சுற்றுலா வந்துவிட்டு சொந்த ஊர் திரும்பியபோது விபத்தில் சிக்கியது தெரியவந்தது. மேலும் விபத்தில் முப்புடாதி (வயது 67), முருகேசன் (வயது 65), இளங்கோ (64), தேவி கலா (வயது 42), கௌசல்யா (வயது 29), செல்வன், நிதின் உள்பட 9 பேர் உயிரிழந்தது தெரியவந்தது. மற்றவர்களுக்கு சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளது வருகி'றது. இந்நிலையில் தான் விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் அறிக்கை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையில் ஓட்டுநரின் அஜாக்கிரதையே விபத்துக்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதோடு விபத்தில் 9 பேர் பலியான நிலையில், 43 பேர் படுகாயமடைந்துள்ளனர். 9 பேர் காயமின்றி தப்பினர் என கூறப்பட்டுள்ளது. மேலும் சம்பவம் தொடர்பாக சுற்றுலா பஸ் உரிமையாள், 2 ஓட்டுனர்கள், சுற்றுலா ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்மீதுவழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எனக்கு திருச்சிக்குள் 100 ஏக்கர் இருக்கு: அன்று கட்சி நோட்டீஸில் 63வது இடத்தில் என் பெயர் KN நேரு




சென்னை, அக். 2

கருணாநிதி நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் சென்னை மயிலாப்பூர் பகுதியில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர் நேரு, கருணாநிதி குறித்த நினைவலைகளை பகிர்ந்ததோடு தன்னை எப்படியெல்லாம் அவர் கட்சியில் வளர்த்துவிட்டார் என்பது குறித்தும் பேசினார்.

1989ஆம் ஆண்டு திமுக அமைச்சரவையில் தனக்கு அமைச்சர் பதவி வாங்கிக் கொடுத்தவர் முரசொலி மாறன் தான் என்றும் திமுக அமைச்சரவையில் நேரு என்ற பெயர் கொண்டவர் இருக்கட்டும் என்று சொல்லி முரசொலி மாறன் தான் தனக்காக கருணாநிதியிடம் சிபாரிசு செய்தவர் எனவும் தெரிவித்துள்ளார். திமுக அமைச்சரவையில் அப்போது 14வது இடத்தில் இருந்த தன்னை கருணாநிதி அழைத்து அருகில் உட்கார வைத்து, எப்படி நீ ஃபைல் பார்ப்பாய், சொல்லு எனக் கேட்ட போது அதிகாரி கையெழுத்து போட்டால் போட்டுவிடுவேன் என்று கூறியதாகவும் அப்படி இருக்கக் கூடாது என்று சொல்லி எப்படி ஃபைல் பார்க்க வேண்டும் என்பதை கற்றுக்கொடுத்தவர் கருணாநிதி எனவும் உருகினார். மிசாகாலத்திற்கு பிறகு கருணாநிதி கல்லக்குடிக்கு திமுக கொடியேற்ற வந்ததாகவும் அப்போது நோட்டீஸில்தனது பெயர்63வது இடத்தில் இருந்ததாகவும் நேரு தெரிவித்தார். அப்படியிருந்த தாம் இன்று திமுகவின் முதன்மைச் செயலாளராக ஆகியிருப்பதை அவர் சூசகமாக தெரிவித்தார்.

ஒரு முறை திருச்சியில் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த கருணாநிதி, 7.15 விடுதி அறையிலிருந்து புறப்படுவார் என எதிர்பார்த்த போது 6.45 மணிக்கெல்லாம் பொதுக் கூட்ட மேடைக்கு போகலாம் என தயாராகி விட்டதாகவும் அப்போது அவரிடம் இன்னும் கொஞ்ச நேரம் கழித்து போகலாம் என்று கூறிய போது, சின்னப் பையனை நம்பி கொடுத்தது தவறாக போச்சே எனத் தன்னை திட்டியதாக அமைச்சர் நேரு தெரிவித்தார்.

# மகளிர் உரிமைத் தொகை: ரூ.1000 கிடைக்காத பலர் செய்த தவறு அடுத்து என்ன செய்யனும்?




சென்னை, அக். 2

ரூ.1000 மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு விண்ணப்பித்தும் பணம் கிடைக்காத பலர் செய்த பொதுவான தவறுகள் என்ன? மீண்டும் எப்படி சரியாகவிண்ணப்பிப்பது என்றுபார்ப்போம். தமிழ்நாடு அரசு கடந்த செப்டம்பர் 15 ஆம் தேதி பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளைமுன்னிட்டு ரூ.1000 கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை தொடங்கியது. இந்தத் திட்டத்தில் மாநிலம் முழுவதும் விண்ணப்பங்கள் பெற 24.07.2023 முதல் 04.08.2023 வரை முதல் கட்டமாகவும், 05.08.2023 முதல் 14.08.2023 வரை இரண்டாவது கட்டமாகவும் விடுபட்டவர்களுக்கு 18.08.2023 முதல் 20.08.2023 வரைசிறப்பு முகாம் வழியாகவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டன. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் அரசிடம் உள்ள பல்வேறு தகவல் தரவு தளங்களில் உள்ள தகவல்களுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டும் மற்றும் அரசு அலுவலர்களால் நேரடி கள ஆய்வுகளின் மூலம் சரிபார்க்கப்பட்டும், திட்ட விதிமுறைகளைப் பூர்த்தி செய்த 1.065 கோடி மகளிர் பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட விண்ணப்பதா ர்களின் தகுதிகள் சரிபார்க்கப்பட்டு, அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும், தகுதியின்மைக்கு உள்ளான விண்ணப்பங்கள் ஏற்கப்படவில்லை.

விண்ணப்பதாரர்களின் விண்ணப்ப முடிவுநிலை குறித்த குறுஞ்செய்தி விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு 18.09.2023 முதல் அனுப்பி வைக்கப் பட்டது.

இவ்வாறு ஏற்கப்படாத விண்ணப்பதா ரர்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால், குறுஞ்செய்தி பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இசேவை மையம் வழியாக வருவாய் கோட்டாட்சியருக்கு மேல்முறையீடு செய்யலாம். மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் 30 நாட்களுக்குள் தீர்வு செய்யப்படும்.

வன்னியரசு சுளீர் வருவாய் கோட்டாட்சியர் மேல்முறையீட்டு அலுவலராகச் செயல்படுவார். இணையதளம் மூலம் செய்யப்படும் மேல்முறையீடுகள், அரசு தகவல் தரவு தளங்களில் உள்ள தகவல்களுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்கப்பட்டு வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பி வைக்கப்படும். வருவாய் கோட்டாட்சியர் மேல்முறையீட்டு விண்ணப்பங்களைத் தீர்வு செய்ய கள ஆய்வு தேவைப்படும் நேர்வுகளில், சம்பந்தப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர்கள் வழி கள ஆய்வு அறிக்கையினைப் பெற்று விசாரணை செய்வார். இந்த மேல்முறையீடு நடைமுறைகள் அனைத்தும் இணையதளம் வழியாக மட்டுமே செய்யப்படும். வருவாய் கோட்டாட்சியர் பயனாளிகளின் தகுதி மற்றும் தகுதியின்மைகள் தொடர்பாக தனி நபர்களின் மூலம் வரப்பெறும் புகார்கள் குறித்த விசாரணை அலுவலராகச் செயல்படுவார். இணையதளம்வழியாகப் பெறப்படும் புகார்கள் மேல் முறையீட்டு மனுக்களுக்கு பின்பற்றப்படும் நடைமுறைகளைப் பின்பற்றி விசாரிக்கப்படும்.

இந்த நிலையில் பணம் கிடைத்தாத பலர் அரசு அலுவலகங்கள், வங்கிகள், இ சேவை மையங்கள் என அலைந்து வருகிறார்கள். ஆனால், இவர்கள் பலரது விண்ணப்பங்கள் நிராகரிக்க காரணம், முகவரி, ஆதார் விவரம், வங்கி கணக்கு விபரம் போன்றவை சரியாக இல்லாததால்தான் என்று கூறப்படுகிறது. அரசு வைத்துள்ள தரவுகளுடன் விண்ணப்பதாரர்களின் விபரங்கள் பொருந்தாத காரணத்தால் உரிய தரவுகள் இல்லை என்று குறிப்பிடப்பட்டு விண்ண ப்பங்கள் ஏற்கப்படாமல் உள்ளன. இப்படி தகவல்கள், தரவுகள் முறையாக இல்லாதவர்கள் மீண்டும் இ சேவை மையத்தை அணுகி உரிய தகவல்களை வழங்கி விண்ணப்பிக்கலாம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இது அல்லாமல் அரசு நிர்ணயித்த தகுதிகளுக்குள் வராத பலரும் விண்ணப்பித்த உள்ள நிலையில், கள ஆய்வில் அவை தவறு என்று தெரிய வந்ததால் நிராகரிக்கப்பட்டு உள்ளன.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு: 94436 99066

# அமமுகவிலிருந்து வந்தவர்களுக்கு அதிமுகவில் முக்கியப் பதவி: டிடிவிதினகரன் கூடாரத்துக்கு எடப்பாடியின் மெசேஜ்



சென்னை, அக். 2

அமமுகவிலிருந்து விலகிதனதுதலைமையை ஏற்று அதிமுகவில் இணைந்தவர்கள் அனைவருக்கும் முக்கிய பதவிகளை வாரி வழங்கியிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. இதன் மூலம் தன்னை நம்பியோரை கைவிடமாட்டேன் என்பதை சூசகமாக உணர்த்தியுள்ளதோடு, இன்னும் ஒன்றும் கெட்டுப்போகவில்லை இப்போது கூட அமமுகவிலிருந்து யார் வேண்டுமானாலும் அதிமுகவுக்கு வரலாம் என்பதை இந்த புதிய பதவி நியமனங்கள் மூலம் தெரியப்படுத்தியுள்ளார் எடப்பாடி பழனிசாமி. அமமுகவில் முக்கிய நிர்வாகிகளாக இருந்த எஸ்.டி.கே. ஜக்கையன், சீனிவாசன், திருச்சி மனோகரன், கிருஷ்ணா ராதா, கோமல் அன்பரசன், திருப்பூர் சிவசாமி, இசக்கி சுப்பையா, அய்யாதுரை பாண்டியன், ஒரத்தநாடு சேகர், உட்பட இன்னும் பலர் டிடிவி தினகரன் மீதான அதிருப்தி காரணமாக வரிசையாக அமமுகவிலிருந்து விலகி அதிமுகவில் இணைந்தவர்கள் ஆவர். மேற்கண்ட இவர்கள் அனைவருக்கும் அதிமுகவில் முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் முக்கியப் பதவிகளை அள்ளிக் கொடுத்து கவுரவித்திருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. திருச்சி மனோகரனுக்கு அமைப்புச் செயலாளர் பதவி, சீனிவாசனுக்கு மாவட்டச் செயலாளர் பதவி, கிருஷ்ண ராதாவுக்கு அதிமுக மகளிர் அணியின் மாநில துணைச் செயலாளர் பதவி, அய்யாதுரை பாண்டியனுக்கு அதிமுக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பதவி என வழங்கியுள்ளார்.

அப்படி என்ன நடந்தது? இதேபோல் அமமுகவிலிருந்தும், ஓ.பன்னீர்செல்வம் அணியிலிருந்தும் யார் வந்தாலும் அவர்களை அதிமுகவில் இணைத்துக்கொள்ள தயார் என்பதோடு வரும் நாட்களில் உரிய முக்கியத்துவம் தரப்படும் என்பதையும் எடப்பாடி பழனிசாமி தனது நடவடிக்கைகள் மூலம் உணர்த்தியுள்ளார். அமமுகவில் ஊசலாட்டத்தில் இருக்கும் நிர்வாகிகள் சிலரை வளைக்க அதிமுக லோக்கல் பிரமுகர்கள் காய் நகர்த்த ஆரம்பித்துவிட்டார்கள். நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னால் அமமுக அதிருப்தி நிர்வாகிகளை யும், ஓ.பன்னீர் செல்வம் அணியில் உள்ள ஓரிரு முக்கிய பிரமுகர்களையும் அதிமுகவுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகள் ஒரு பக்கம் நடைபெற்று வருகின்றன. இதனிடையே இது குறித்து டிடிவி தினகரன் பெரிதாக அலட்டிக் கொள்ளாத நிலையில், ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்களை தக்க வைக்க சற்று போராட வேண்டியதாக தான் உள்ளது.

# சரக்கு ரயிலுக்கு அடியில் சிக்கிய மூதாட்டி உயிர் தப்பிய அதிசயம்: திருச்சியில் சம்பவம்

திருச்சி, அக்.2

திருச்சியில் சரக்கு ரயிலுக்கு அடியில் சிக்கிய மூதாட்டி ஒருவர் எந்த காயமும் இன்றி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பி மறுபிறவி எடுத்து வீடியோ இணையதளங்களில் வெளியாகி வேகமாக பரவி வரும் நிலையில் அதன் பின்னணி குறித்த தகவல் வெளியாகி உள்ளது.



இந்தியா முழுவதும் ரயில் நிலைய பகுதிகளில் சிலர் மிகவும் அலட்சியமாக நடமாடுவது உண்டு. அதாவது ஓடும் ரயில் ஏறுவது, நிறுத்தப்பட்ட ரயிலுக்கு அடியில் குனிந்து மறுபுறம் செல்வது, ரயில்வே கேட் மூடப்பட்டாலும் கூட அதனை கடந்து செல்வது என பல செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

நடுங்குதே இப்படிப் பட்ட நேரங்களில் சில எதிர்பாராத விபத்துகள் நடக்கிறது. இதனால் சிலர் மரணமடைந்துள்ள நிலையில் பலர் காயமடைந்துள்ளனர். இதனால் ரயில்கள் மற்றும் ரயில் நிலையங்களில் மக்கள் எப்படி கவனமாக செயல்பட வேண்டும் என்பது பற்றி ரயில்வே அமைச்சகம் விழிப்புணர்வுகளையும், அறிவுரைகளையும் வழங்கி வருகிறது. ஆனாலும் கூட பலரும் இதனை காதில் வாங்கி கொள்ளாமல் தொடர்ந்து அலட்சியமாக செயல்பட்டு வருகின்றன. இத்தகைய சூழலில் தான் இன்று திருச்சி மாவட்டம் மணப்பாறை ரயில்நிலையத்தில் மூதாட்டி ஒருவர் சரக்கு ரயிலுக்கு அடியில் சிக்கி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார்.

திருச்சி மாவட்டம் மணப்பாறை ரயில் நிலையத்துக்கு தினமும் 50க்கும் அதிகமான ரயில்கள் வந்து செல்கின்றன. இந்த ரயில் நிலையத்தில் பயணிகள் ரயில் வரும் போது அதற்கு வழிவிடும் வகையில் சரக்கு ரயில்கள் மற்றொரு தண்டவாளத்தில் நிறுத்தி வைக்கப்படுவது வழக்கமான நடைமுறையாக உள்ளது. அதேபோல் சரக்கு ரயில் ஒன்று தண்டவாளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது. அப்போது சரக்கு ரயிலின் அடியில் நுழைந்து மறுபுறத்துக்கு சிலர் சென்றனர். இதனை பார்த்த மூதாட்டி ஒருவரும் சரக்கு ரயிலின் அடியில் சென்று மறுபுறம் செல்ல முயன்றார். இந்த வேளையில் எதிர்பாராத விதமாக சரக்கு ரயில் புறப்பட்டது. இதனால் அந்த மூதாட்டி பதறிப் போனார். இதை அங்கிருந்த ரயில்வே ஊழியர் மற்றும் மக்கள் பார்த்து அதிர்ச்சியடைந்தனர்.

உடனடியாக அவர்கள் தண்டவாளத்தில் அப்படியே படுத்து விடும்படி கூறினர். இதை கேட்ட மூதாட்டி தண்டவாளத்தில் அப்படியே படுத்து கிடந்தார். சரக்கு ரயில் மெதுவாக சென்று கொண்டிருந்தது. இதற்கிடையே ரயில்வே ஊழியர் உடனடியாக என்ஜின் டிரைவருக்கு தகவல் தெரிவித்தார். இதையடுத்து அவர் ரயிலை நிறுத்தினார். இதையடுத்து மூதாட்டி தண்டவாளத்தில் இருந்து எழுந்து மறுபுறம் சென்றார். அந்த மூதாட்டி எந்த காயங்களும் இன்றி உயிர் தப்பி மறுபிறவி எடுத்தார். இதற்கிடையே மூதாட்டி ரயில் தண்டவாளத்தில் படுத்து உயிர் பிழைத்த வீடியோ இணையதளங்களில் வெளியாகி பரவி வருகிறது.

# டெல்லி இருக்கட்டும்.. அண்ணாமலையின் பாத யாத்திரையில் நடந்த திடீர் மாற்றம்

சென்னை, அக். 2

தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை பாத யாத்திரை நடத்தி வரும் நிலையில், அதில் சைலெண்டாக பல மாற்றங்கள் நடந்துள்ளன. இது குறித்து நாம் பார்க்கலாம். தமிழக அரசியல் களத்தில் கடந்த சில காலமாகவே பெரும் பரபரப்பு தொற்றுக் கொண்டு இருக்கிறது. குறிப்பாக அதிமுக பாஜக கூட்டணி முறிவு ஏற்பட்ட பிறகு, விரைவில் புது மாற்றங்கள் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக தமிழக பாஜக மாநில தலைவராக இருக்கும் அண்ணாமலை மாற்றப்படலாம் என கூறப்படுகிறது. இதற்கிடையே அண்ணாமலை இப்போது திடீர் பயணமாக டெல்லிக்கும் சென்றுள்ளார். பாத யாத்திரை: இது ஒரு பக்கம் இருக்க அண்ணாமலையின் பாத யாத்திரையிலும் மாற்றங்கள் வந்துள்ளது. அதாவது அண்ணாமலையின் "என் மண், என் மக்கள்" என்ற பெயரில் யாத்திரை நடத்தி வருகிறது. இந்த யாத்திரையின் இரண்டாம் கட்டப் பயணம் இந்த வாரம் நிறைவடைந்தது. இதற்கிடையே மூன்றாவது கட்ட யாத்திரை வரும் அக்டோபர் 4 முதல் அக்டோபர் 31 வரை நடைபெறுகிறது. இதில் மேற்கு மற்றும் டெல்டா பகுதிகளில் உள்ள 40 சட்டமன்ற தொகுதிகளில் அண்ணாமலை நடைபயணம் மேற்கொள்கிறார்.



முதல் கட்ட நடைபயணத்துடன் ஒப்பிடுகையில் இரண்டாம் கட்டத்தில் ஆதரவு அதிகரித்துள்ளதாக பாஜக நிர்வாகிகள் கூறுகின்றனர். இருப்பினும், இந்த இது வரை நடந்த யாத்திரையை பார்க்கும் போது, முதலில் திட்டமிடப்பட்ட பல விஷயங்கள் இப்போது யாத்திரையில் மிஸ் ஆகிறது. திடீர் மாற்றங்கள்: அதாவது முக்கிய இடங்களில் "தாமரை மலரும் மாநாடு" என்ற பெயரில் 11 பொதுக்கூட்டங்கள் நடத்த திட்டமிடப்பட்டது. முதல் இரண்டு கட்டங்களில் மதுரை, திருநெல்வேலி, தென்காசி, கோவை, நீலகிரி ஆகிய இடங்களில் இந்த பொது கூட்டத்திற்கு திட்டமிட்டனர். இதில் திருநெல்வேலியில் மட்டும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதில் மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ் கலந்து கொண்டார். அதை தவிர வேறு எந்த இடத்திலும் இந்த பொதுக்கூட்டம் நடைபெறவில்லை. அதே போல் இளைஞர்களை குறிவைத்து "நாளைய தமிழகம்", மகளிருக்காக "சிங்கப்பெண்ணே" ஆகிய கூட்டங்களும் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், அவை எதுவும் நடக்கவில்லை. நாகர்கோவில், கோவை மதுரை மற்றும் சென்னையில் நான்கு வேலை வாய்ப்பு முகாம்களும் திட்டமிடப்பட்டன. இருப்பினும் முதல் இரண்டு கட்ட யாத்திரை முடிந்துள்ள நிலையில், எங்கும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படவில்லை. என்ன காரணம்: இது குறித்து பாஜக வட்டாரங்கள் கூறுகையில், "இந்த கூட்டங்களை எல்லாம் நடத்த திட்டமிட்டது உண்மைதான். ஆனால், போதிய நேரம் இல்லை. குறுகிய காலத்தில் அதிக பட்ச மக்களை சந்திக்க வேண்டி இருக்கிறது. இந்த நேரமின்மை காரணமாகவே இந்த பொதுக் கூட்டங்களை கைவிட வேண்டி இருந்தது. நேரடியாக மக்களை சாலையில் சந்திக்க வேண்டும் என்பதே திட்டமாக இருக்கிறது. அதற்கு நல்ல வரவேற்பும் கிடைக்கிறது. மத்திய தலைமை அறிவுறுத்தல் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுத்துள்ளோம். எங்கள் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நல்ல பலன் கிடைக்கிறது. பொது கூட்டங்களுக்கு பதிலாக இப்போது இளைஞர்கள், பெண்கள் நேரடியாக பாத யாத்திரையிலேயே கலந்து கொள்கிறார்கள்" என்று கூறுகிறார்கள்.

ஆதரவு அதிகமாம்: மேலும், இரண்டாம் கட்ட யாத்திரையில் மக்கள் வரவேற்பு இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கும் பாஜகவினர், தொண்டர்களுக்கு அதிக சுமை இருக்கக் கூடாது என்பதற்காகவும் இந்த கூட்டங்களை ரத்து செய்ததாகவும் தெரிவிக்கிறார்கள். அதேநேரம் வரும் காலத்தில் மிக பெரிய கூட்டங்கள் நிச்சயம் நடத்துவோம் என்றும் அவர் தெரிவித்தார். மூன்றாம் கட்ட பாத யாத்திரை தொடங்க சில நாட்கள் இருக்கும் நிலையில், பாஜக மாநில தலைவர் அண்ணாமலை இப்போது இரண்டு நாள் டெல்லி சென்றுள்ளார். அவர் செவ்வாய்க்கிழமை தமிழகம் திரும்பும் நிலையில், அதன் பிறகு முக்கிய மாற்றங்கள் வரும் என்றும் கூறப்படுகிறது.

# செயல்படாத அரசாக உள்ளது.. எப்போது தேர்தல் வந்தாலும் திமுக ஆட்சி முடிவுக்கு வரும்.. டிடிவி

மதுரை, அக். 2

தமிழகத்தில் எப்போது சட்டமன்ற தேர்தல் வந்தாலும் திமுக ஆட்சி முடிவுக்கு வரும் என்றும், தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகள் ஒன்றையும் திமுக நிறைவேற்றாமல் செயல்படாத அரசாக உள்ளது என்றும் டிடிவி தினகரன் கூறினார். அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் மதுரையில் இன்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

கூட்டணி குறித்து டிசம்பர் ஜனவரியில் நிலையான முடிவு எடுப்போம். கூட்டணிக்கு வாய்ப்பு உள்ளது. கூட்டணி சரியாக அமையவில்லை என்றால் தனித்து போட்டியிடவும் வாய்ப்பு உள்ளது. பாஜகவுடன் கூட்டணி அமைக்க வாய்ப்பு உள்ளதா என்று கேட்கிறீர்கள்... மூன்று வாய்ப்புகள் உள்ளதாக நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். ஆளும் பாஜக கூட்டணியில்... பிரதமர் வேட்பாளர் சொல்ல வேண்டும் அதை சொல்லித்தான் வாக்கு கேட்க வேண்டும் என்ற பட்சத்தில் தமிழ்நாட்டு மக்கள் அதுபோன்ற ஒரு நிலைப்பட்டில் இருப்பதால் ஒன்று காங்கிரஸ் கூட்டணி அல்லது பாஜக கூட்டணி... நீங்கள் கேட்பீர்கள்.. காங்கிரஸ் திமுகவோடு இருக்கிறது என்று.. திமுக மத்தியில் ஆளும் பாஜகவுக்கு பயந்து கொண்டு இருக்கிறது. காங்கிரசை கூட்டணியில் இருந்து திமுக கழற்றி விட்டால் கூட்டணி அமைக்க வாய்ப்பு இருக்கிறது. அதனால் வாய்ப்புகளை சொல்கிறேன். அப்படி ஒரு நிலை என்றால் தனித்து போட்டியிடுவோம்... அண்ணாமலையை முதல்வர் வேட்பாளராக்க வேண்டும் என்ற நிர்பந்தம் தான் அதிமுக பாஜக கூட்டணி முறிவுக்கு காரணம் என பேசப்படுவதாக கேட்கிறீர்கள்.. யூகங்களுக்கு எல்லாம் பதிலளிக்க முடியாது. ஊடகத்தில் பார்க்கிற.. கற்பனையான தகவலாக கூட இருக்கலாம். ஊர்ஜிதமான தகவலாக இருக்கும் வரை அது குறித்து நாம் பேசுவது சரியாக இருக்காது.

இனி எப்போது தமிழகத்திற்கு சட்டமன்ற தேர்தல் வந்தாலும் திமுக ஆட்சி முடிவுக்கு வரும். தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் செயல்படாத அரசாக திமுக இருக்கிறது. எனவே இனி திமுக ஆட்சி வராது. இவ்வாறு அவர் கூறினார்.

மேலும் தமிழக ஆளுநர் கூறியது தொடர்பாக செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு டிடிவி தினகரன் கூறியதாவது: பெண்கள் ஆண்கள் சமம் அப்படி என்கிற நிலை உருவாகியிருக்கிறது. அதற்கு காரணம் சமூக நீதியும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோரது செயல்பாடுகளால் தான். கடந்த 50 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தீண்டாமை இல்லை. சாதி சமய வேறுபாடுகள் இல்லை. படிப்பிலும் சரி தொழில் செய்வதிலும் சரி பிறப்பால் எந்த பிரிவினையும் கிடையாது. இன்னும் சொல்லப்போனால் ஆண்களும் பெண்களும் இரு கண்கள் என்ற அளவிற்கு சமுதாயம் வளர்ந்துள்ளது. தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன் உதாரணமாக தான் இருக்கிறது. அங்கு ஒன்றும் இங்கும் என்று தனி ஒருவரின் செயல்பாடுகளை வைத்து ஆளுநர் கூறுவது சரியாகாது. இவ்வாறு அவர் கூறினார்.

# மாநகராட்சி ஆணையர் பணி மாறுதல்: அழுத தஞ்சை மேயர்

தஞ்சை,அக். 2

தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் சரவணக்குமார் கரூருக்கு பணிமாறுதல் பெற்று செல்லவுள்ள நிலையில் அவருக்கு நடந்த ஃபேர்வெல் விழாவில் கண்கலங்கி அழுதபடி பிரியாவிடை கொடுத்து அனுப்பியுள்ளார் தஞ்சை மேயர் சன். ராமநாதன்.



இதிலென்ன ஆச்சரியம் என்று கேட்கிறீர்களா. பொதுவாக ஒரு ஸ்டிரிக்டான அதிகாரி இடம் மாறுதல் பெற்றுச் செல்கிறார் என்றால் அங்கிருக்கும் லோக்கல் அரசியல்வாதிகள் அப்பாடா தொலைந்தது சனியன் என்று தான் நினைத்து கொண்டாடுவார்கள். ஆனால் தஞ்சையில் நிகழ்ந்திருப்பதோ, அதிகாரிக்காக அரசியல்வாதி அழுதிருப்பது. இதனை தமிழக அரசியலின் ஆபூர்வ நிகழ்வு என்றே கூறலாம்.

தஞ்சை மாநகராட்சி ஆணையர் சரவணக்குமாரை பொறுத்தவரை ரொம்ப ஸ்டிரிக்டான அதிகாரி என்ற பெயர் எடுத்தவர். ஒப்பந்தப்பணிகள் உட்பட மாநகராட்சி கடை வாடகை வரை மிகவும் கறாராக இருந்தவர். அட்ஜெஸ்ட்மெண்ட் என்ற பேச்சுக்கே இடமளிக்காதவர். இப்படிப்பட்ட ஒரு அதிகாரி வேரு ஊருக்கு செல்கிறார் என்றால் அந்த ஊரைச் சேர்ந்த ஆளுங்கட்சி பிரமுகர்கள் கொண்டாடுவது தான் வழக்கம்.

ஆனால் தஞ்சையில் நடந்திருப்பதோ அதற்கு நேர் மாறானதாக இருந்தது. இதிலிருந்தே எந்தளவுக்கு வெளிப்படையான நிர்வாகத்தை தஞ்சை மேயர் சன்.ராமநாதன் கொடுத்திருக்கிறார் என்பது புரிய வருகிறது. இதனிடையே இதில் குறிப்பிட்டுச்சொல்லவேண்டிய சிறப்பு தகவல் என்னவென்றால் தமிழ்நாட்டிலேயே கடன் இல்லாத மாநகராட்சியாக தஞ்சை மாநகராட்சியை மாற்றிய பெருமையும் ஆணையர் சரவணக்குமாருக்கு உண்டு.

அண்மையில் கூட தஞ்சை மாநகராட்சி நிர்வாகத்துக்கு சொந்தமான கடைகளை ஏலம் விட்டதன் மூலம் கிடைத்த ரூ.27 கோடியை மாநகராட்சி பெயரில் வைப்பு நிதியாக செலுத்தியிருக்கிறார் சரவணக்குமார். தஞ்சையை போலவே கரூர் மாநகராட்சியிலும் சரவணக்குமார் இன்னும் பல அதிரடிகளை அரங்கேற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக இதுவரை பள்ளிக்கூடங்களில் இருந்து இடம் மாறுதல் செய்யப்பட்ட ஆசிரியர்களை தான் மானவர்கள் பிரியாவிடை கொடுத்து அனுப்பியிருப்பதை பார்த்திருப்போம். முதல் முறையாக கறார் அதிகாரி ஒருவருக்கு அரசியல்வாதியான தஞ்சை மேயர் பிரியாவிடை கொடுத்து கண்கலங்கிய படி வழியனுப்பி வைத்ததை இப்போதுதான் பார்க்கிறோம்.

மாநகராட்சி ஆனையராக சரவணக்குமார் தஞ்சையில் 2 ஆண்டுகள் 2 மாதம் பணியாற்றியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்பை சீர்குலைக்கும் முயற்சி தேசிய மருத்துவ ஆணையத்தை விளாசும் காங்கிரஸ்

சென்னை, அக். 2

தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்பை சீர்குலைக்கும் முயற்சியில் தேசிய மருத்துவ ஆணையம் ஈடுபட்டுள்ளதாக தமிழககாங்கிரஸ்கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி விமர்சித்துள்ளார். இது குறித்து அவர் விடுத்திருக்கும் அறிக்கை வருமாறு;






தேசிய மருத்துவ ஆணையம் மாநிலங்களில் மருத்துவ படிப்பிற்கான இடங்களின் எண்ணிக்கையை மக்கள் தொகைக்கு ஏற்ப நிர்ணயிக்கப்படும் என்று முடிவு செய்துள்ளது. இந்த முடிவு மருத்துவத் துறையில் முன்னேறிய மாநிலங்களாக இருக்கிற தென்னகத்தை சேர்ந்த தமிழ்நாடு, கர்நாடக, ஆந்திரா, கேரளா, தெலுங்கானா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் சிறப்பாக செயல்பட்டு வருகிற மருத்துவத்துறைக்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிற செயலாகும்.

இதன் மூலம் தென்னக மாநிலங்களுக்கும், ஒன்றிய அரசுக்கும் மோதல் போக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநிலங்களில் தேசிய மருத்துவ ஆணையம் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளில் கூறப்பட்டுள்ள மருத்துவப்படிப்பிற்கான இடங்களின் எண்ணைக்கையை விட அதிகமாக தற்போது இருந்து வருகிறது.

இந்த முடிவு 202425 கல்வி ஆண்டில் இருந்து நடைமுறைக்கு வரும் என்று கூறப்பட்டிருக்கிறது. 10 லட்சம் மக்கள் தொகைக்கு 100 மருத்துவ இடங்கள் என்று கொள்கை முடிவு செய்யப்பட்டிருக்கிறது. 2021 நிலவரப்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகையான 7.64 கோடிக்கு 11600 இடங்கள் தற்போது நடைமுறையில் உள்ளன. ஆனால் புதிய ஒன்றிய அரசின் முடிவின்படி தமிழ்நாட்டினுடைய மொத்த இடங்கள் 7600 ஆக ஏறத்தாழ 4000 இடங்கள் குறைக்கப்பட உள்ளது. இது தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்பையே சீர்குலைத்து விடுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் குறிப்பாக சென்னை, கோவை போன்ற மாநகரங்களில் நவீன மருத்துவ வசதி அதிகமாக இருப்பதால் இந்தியாவின் பல மாநிலங்களில் இருந்து இங்கு வந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது மக்கள் தொகை அடிப்படையில் மாநிலத்தில் மருத்துவ இடங்களை நிர்ணயிப்பது மக்களின் மருத்துவ தேவை கடுமையாக பாதிக்கப்படும்.

அரசமைப்புச்சட்டத்தில் கல்வி என்பது பொதுப்பட்டியலில் இருந்தாலும் ஒன்றிய அரசு புதிய கல்விக் கொள்கை, நீட் தேர்வு ஆகியவற்றை தமிழகத்தின் மீது திணிப்பதன் மூலம் ஒன்றிய மோடி அரசு அரசமைப்புச்சட்டத்தை மீறுவதோடு, தமிழ்நாட்டில் உரிமைகளை தொடர்ந்து பறித்து வருகிறது. இதை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக வன்மையாக கண்டிக்கிறேன்.

ஒன்றிய அரசின் தேசிய மருத்துவ ஆணையத்தின் புதிய வழிகாட்டும் நெறிமுறைகளை உடனடியாக திரும்பப்பெறுவதற்கு மாநில உரிமைகளுக்காக குரல்கொடுத்து போராடி வருகிற தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அன்போடு வேண்டுகிறேன்.

# பயிர் கருகிக் கிடக்கு.. காவிரி நீர் திறந்துவிடாத கர்நாடக அரசை கண்டித்து டெல்டா விவசாயிகள் போராட்டம்

தஞ்சாவூர், அக். 2

தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறந்து விடாத கர்நாடக அரசை கண்டித்தும், காய்ந்த குறுவை பயிர்களுக்கு காப்பீட்டுக்கு இணையான நிவாரணம் தர வலியுறுத்தியும் டெல்டா மாவட்ட விவசாயிகள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு காவிரியில் 24,000 கன அடி நீர் திறந்து விடக் கோரி வழக்கு தொடர்ந்தது. ஆனால் கர்நாடகாவில் வறட்சி நிலவுகிறது என்பதால் தமிழ்நாட்டுக்கு காவிரி நீரை திறக்க முடியாது எனக் கூறி, காவிரி நீரை திறந்துவிட வேண்டும் என்ற காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுக்கு தடை கோரியும் கர்நாடகா மனுத் தாக்கல் செய்தது.

கர்நாடகாவின் மனுவை தள்ளுபடி செய்த உச்சநீதிமன்றம், காவிரி மேலாண்மை ஆணைய உத்தரவுப்படி தமிழ்நாட்டுக்கு வினாடிக்கு 5,000 கன அடி நீரை திறக்க உத்தரவிட்டது. எனினும், கர்நாடகாவில் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக போராட்டங்கள் வெடித்துள்ளன. இதனால், காவிரியில் தண்ணீர் திறக்கப்படாமல் இருக்கிறது.

இதற்கிடையே, கர்நாடகாவில் இருந்து காவிரியில் தண்ணீர் கிடைக்காததால் தமிழ்நாட்டில் 3.50 லட்சம் ஏக்கரில் குறுவை கதிர் வரும் நிலையில் கருகத் தொடங்கியுள்ளது. டெல்டா மாவட்டங்களில் சுமார் 15 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி துவங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே உடனடியாக மத்திய அரசு தலையிட்டு கர்நாடகாவில் உரிய தண்ணீரை பெற்று தமிழக விவசாயத்தை பாதுகாக்க வேண்டும். மேகதாது அணை கட்டுமான பணியை தடுத்து நிறுத்த வேண்டும். காவிரி மேலாண்மை ஆணையத்தை முடக்க நினைக்கும் மத்திய அரசு அதனை கைவிட வேண்டும்.

தன்னாட்சி அதிகாரத்தோடு காவிரி மேலாண்மை ஆணையம் செயல்பட அனுமதிக்க வேண்டும். தமிழ்நாட்டில் காவிரி நீர் கிடைக்காததால் பாதிக்கப்பட்ட குறுவை விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூபாய் 35 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி காவிரி படுகை பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பில் திருவாரூரில் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில், காவிரியில் தண்ணீர் திறந்து விடாத கர்நாடக அரசை கண்டித்து தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டியக்கம் சார்பில் காவிரி உழவன் உருவ பொம்மையை பாடை கட்டி தூக்கிச் செல்லும் போராட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் ஈடுபட்டனர்.

காய்ந்து, கைவிடப்பட்ட குறுவைப் பயிர்களுக்கு தமிழ்நாடு அரசு ஏக்கருக்கு பயிர்காப்பீட்டிற்கு இணையான நிவாரணம் வழங்கிடவும், பகுதி பாதித்த உழவர்களுக்கு டீசல் மானியம் வழங்கி உதவிட கோரியும், குறுவைப் பயிருக்கான காப்பீடு வரும் காலங்களில் அரசே ஏற்று நடத்திடவும் வலியுறுத்தியும் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மயிலாடுதுறை பழைய பேருந்துநிலையம் அருகே காவிரிப்படுகை பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பில் டெல்டா மாவட்டங்களில் கருகும் பயிரை காப்பாற்ற தமிழகத்திற்கான காவிரி நீரை பெற்றுதரக் கோரி தொடர் முழக்கப் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டங்களில் ஏராளமான டெல்டா விவசாயிகள் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறந்துவிட உச்சநீதிமன்றம் உத்தரவிட்டதை எதிர்த்து கர்நாடகா மாநிலம் முழுவதும் போராட்டம் வெடித்துள்ள நிலையில், காவிரி நீரை வழங்கக் கோரி தமிழ்நாட்டில் விவசாயிகள் போராட்டங்களில் ஈடுபட்டு வருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 02.10.2023

# 10 ஆண்டுகள் காத்திருந்து நடித்த படம் ரத்தம்: விஜய் ஆண்டனி



சி.எஸ். அமுதன் இயக்கத்தில் விஜய் ஆண்டனி, மகிமா நம்பியார், ரம்யா நம்பீசன், நந்திதா ஸ்வேதா, நிழல்கள் ரவி நடித்துள்ள படம், 'ரத்தம்'. வரும் 6ம் தேதி திரைக்கு வரும் இப்படத்தின் அறிமுக நிகழ்ச்சி சென்னையில் நடந்தது. தனது மூத்த மகள் மீரா இறந்த சில நாட்கள் இடைவெளியில், முதல்முறையாக விஜய் ஆண்டனி தனது இளைய மகள் லாராவுடன் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றார். அப்போது பேசிய சி.எஸ்.அமுதன், 'எப்போதுமே படத்தை முடித்துவிட்டு பத்திரிகையாளர்களை நேரில் சந்தித்துப் பேசுவது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். இன்று அப்படி இல்லை. எனது அப்பா இறந்தபோது, திரைத்துறையிலிருந்து எங்கள் வீட்டுக்கு வந்தவர் விஜய் ஆண்டனி மட்டுமே. அப்போது அவர் என்னிடம், 'நாங்கள் எப்போதும் உங்களுடன் இருப்போம்' என்றார். அன்று அவர் எனக்கு சொன்னதையே இன்று நான் அவருக்கு சொல்ல ஆசைப்படுகிறேன். நாங்கள் எப்போதும் உங்களுடன் இருப்போம்' என்று, உருக்கமாகப் பேசினார்.

பிறகு பேசிய விஜய் ஆண்டனி, 'அமுதன் எனது நெருங்கிய நண்பர். அவரது தந்தை எனக்கு மியூசிக் சொல்லிக்கொடுக்க மிகவும் கஷ்டப்பட்டார். ஆனால், நான் மியூசிக் கற்றுக்கொள்ளாமலேயே சினிமாவுக்கு வந்துவிட்டேன் என்று, அவருக்கு என்மீது லேசான கோபம் இருந்தது. அமுதனுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று நினைத்தேன். 10 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது அந்த சந்தர்ப்பம் அமைந்தது' என்றார். விஜய் ஆண்டனி தனது பேச்சில் மூத்த மகளின் இறப்பு, இளைய மகளை தன்னுடன் அழைத்து வந்தது குறித்து எதுவும் பேசவில்லை.

# குழந்தைகளுக்கான படத்தில் சினேகா



தமிழில் பிரசன்னா, சினேகா ஜோடியாக நடித்து, பிறகு அவர்கள் காதல் திருமணம் செய்வதற்கு முக்கிய காரணமாக இருந்த 'அச்சமுண்டு அச்சமுண்டு', அர்ஜூன் நடித்த 'நிபுணன்', மலையாளத்தில் மோகன்லால் நடித்த 'பெருச்சாழி' ஆகிய படங்களை இயக்கியவர், அருண் வைத்தியநாதன். சித்தார்த் நடிப்பில் வெளியான 'டக்கர்' என்ற படத்தில் முக்கிய வேடத்தில் நடித்திருந்தார். தற்போது அவர் எழுதி இயக்கியுள்ள படம், 'ஷாட் பூட் த்ரீ'. இதில் வெங்கட் பிரபு, சினேகா, யோகி பாபு, கைலாஷ், பிரணதி, பூவையார், வேதாந்த் நடித்துள்ளனர். ராஜேஷ் வைத்யா இசை அமைத்துள்ளார்.

படம் பற்றி அருண் வைத்தியநாதன் கூறியதாவது: இது குழந்தைகளுக்கான படம் மட்டுமல்ல, குழந்தைகள் படமும் கூட. ஒரே பகுதியில் வசிக்கும் 4 சிறுவர்களுக்குப் பொதுவானதாக இருக்கிறது, ஒரு தெரு நாய். அதன்மீது அதிக பாசத்தைச் செலுத்தி வளர்க்கின்றனர். திடீரென்று ஒருநாள் அந்த நாய் காணாமல் போகிறது. உடனே அதைக் கண்டுபிடிக்க நால்வரும் கிளம்புகின்றனர். அந்தப் பயணத்தில் அவர்கள் கற்றதும், பெற்றதும் என்ன என்பது படம். இப்படத்தின் கதையை நான் முதலில் சினேகாவிடம் சொல்ல முயன்றபோது, இதில் நடிக்க மறுத்துவிட்டார்.

தனது மகனையும், மகளையும் கவனிப்பதற்கே நேரம் சரியாக இருக்கிறது என்று சொன்னார். 'இது குழந்தைகள் படம் என்பதால், நீங்கள் அவர்களுடனும் இருக்கலாம்' என்று சொல்லி கதையைச் சொன்னபோது, தனது கேரக்டரும், இந்தக் கதையும் தனக்கு மிகவும் பிடித்ததால் உடனே நடிக்க ஒப்புக்கொண்டார். படப்பிடிப்பில் சிறுவர்களுடன் ஜாலியாக விளையாடினார். 29 நாட்களில் முழு படப்பிடிப்பையும் முடித்தோம். சக உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்பதே இப்படத்தின் கதை.

# தயாரிப்பாளர்களின் பாலியல் தொந்தரவு: இஷா குப்தா பரபரப்பு குற்றச்சாட்டு



பாலிவுட் நடிகையும், தமிழில் வெளியான 'யார் இவன்' என்ற படத்தில் நடித்தவருமான இஷா குப்தா, தனியார் சேனல் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: திரைப்படம் ஒன்றின் இணை தயாரிப்பாளர், என்னுடன் பாலியல் உறவு கொள்ள விருப்பம் தெரிவித்தார். அவருடன் பணியாற்றிய அப்படத்தில் பாதிக்கு மேல் பணிகள் முடிந்துவிட்டன. ஆனால், நான் அவருடன் பாலியல் உறவு வைத்துக்கொள்ள மறுத்ததால், அப்படத்தின் தயாரிப்பாளர் அப்படத்தில் இருந்து என்னை நீக்கினார். மற்றொரு படத்தில் நான் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, வெளிப்புறப் படப்பிடிப்புக்காக ஒரு இடத்துக்கு சென்றிருந்தோம்.

அப்போது அப்படத்தில் தொடர்புடைய இருவர், 'அவுட்டோர் ஷூட்டிங்' என்று சொல்லி, என்னை வெளியே அழைத்துச் சென்றனர். பிறகு இருவரும் என்னிடம் பாலியல் ரீதியாக நெருங்கி வருவதை தெரிந்துகொண்டேன். எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்தேன். ஆனால், அவ்வாறு நடக்கவில்லை. அவர்கள் என்னை அவர்களது பாலியல் திட்டத்தில் சிக்க வைக்க கடுமையாக முயற்சி செய்தனர். ஆனால், நான் புத்திசாலித்தனமாக செயல்பட்டு, எனது அறைக்கு பெண் ஒப்பனைக்கலைஞரை வரவழைத்து அன்றிரவு தங்க அனுமதித்தேன். இதனால், அந்த நபர்களின் வலையில் நான் சிக்கவில்லை. எளிதாக தப்பித்துவிட்டேன்.

# மகாநதியை விட இந்த படம் பிடிச்சிருக்கு: கமல்ஹாசன் ஓபன் டாக்




'மகாநதி படத்தை விட எனக்கு இந்தப் படம் மிகவும் பிடித்திருக்கிறது' என 'சித்தா' படத்தை கமல்ஹாசன் பாராட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் பேசியுள்ள வீடியோவில், 'சித்தா படத்தைப் பார்த்தேன். குழந்தைகளுக்கு என்ன தான் அம்மா சொல்லிக் கொடுத்தாலும், அவர்களின் மனதில் பதியும்படி இருக்க வேண்டுமென்றால் கதை சொல்ல வேண்டும். எனக்கு இதில் மிகவும் பிடித்தது என்னவென்றால், இறுதியில் அழுத்தத்துடன் வெளியே வராமல், இப்படியெல்லாம் நடக்கிறது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என சொல்லியிருக்கிறார்கள். பெண் குழந்தை, ஆண் குழந்தையெல்லாம் தாண்டி குழந்தைகளாகவே அவர்களை பார்க்க வேண்டும்.



இந்த படத்தில் இயக்குநருக்கு முக்கியமான பாராட்டு என்றால், விபத்தை விவரிக்கும்போதே மூளை எப்படி சிதறியது தெரியுமா என விவரிப்பார்கள். அப்படியெல்லாம் இல்லாமல், ஒரு கொலையை கேமராவை காட்டாமல் முதல் தகவல் அறிக்கையை யதார்த்தமாக வெளிப்படுத்தி யிருக்கிறார். நல்ல திரைக்கதை ஆசிரியர்கள் ரசிகர்களின் மனதில் ஊன்றி நடக்க வேண்டும். ஊன்றிய இடத்தில் தடயம் பதிய வேண்டும். அப்படி நிறைய தடங்கள் இருக்கிறது. படக்குழுவின் இன்ஸ்பிரேஷன் 'மகாநதி' என்றால் எனக்கு அதைவிட இது பிடித்திருக்கிறது. வசூல் ரீதியாக படம் வெற்றிபெற வேண்டும் என்பது என்னுடைய ஆசை' என பேசியுள்ளார்.



# அரண்மனை 4ல் தமன்னா, ராசி கன்னா

சுந்தர்.சி இயக்கத்தில் உருவாகியுள்ள 'அரண்மனை 4' படத்தின் முதல் தோற்றத்தை படக்குழு வெளியிட்டுள்ளது. மேலும், படம் அடுத்த ஆண்டு பொங்கல் பண்டிகையையொட்டி திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2014ம் ஆண்டு சுந்தர்.சி இயக்கத்தில் ஹன்சிகா, ஆண்ட்ரியா, வினய் உள்ளிட்டோர் நடிப்பில் வெளியானது 'அரண்மனை'. 2016ம் ஆண்டு வெளியான இப்படத்தின் இரண்டாம் பாகத்தில் சித்தார்த் நடித்திருந்தார். 2021ம் ஆண்டு இப்படத்தின் மூன்றாம் பாகம் வெளியானது. ஆர்யா, ராசி கன்னா, சாக்ஷிஷி அகர்வால் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். ஹாரர் – காமெடி ஜானரில் சீரிஸாக வெளியாகும் இப்படத்தின் நான்காவது பாகத்துக்கான அறிவிப்பை படக்குழு தற்போது வெளியிட்டுள்ளது. இந்தப்படத்தையும் சுந்தர்.சியே இயக்குகிறார். இப்படத்தில் சுந்தர் சி, தமன்னா, ராசி கன்னா, யோகி பாபு, கோவை சரளா, சிங்கம்புலி, விடிவி. கணேஷ், டெல்லி கணேஷ், ஜே.பி, விச்சு, கே.ஜி.எஃப். ராம், சேசு, சந்தோஷ் பிரதாப், மொட்டை ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். ஹிப்ஹாப் ஆதி படத்துக்கு இசையமைக்கிறார்.

# இயக்குனர் சீனு ராமசாமி நடிகரானார்



தங்கம் சினிமாஸ் சார்பில் எஸ்.தங்கராஜ் தயாரிக்க, இயக்குனர் சி.வி.குமார் உதவியாளர் விஜய் கார்த்திக் எழுதி இயக்கும் படத்தில், இயக்குனர் சீனு ராமசாமி நடிகராக அறிமுகமாகிறார். இப்படத்தின் முதல் காட்சியை தயாரிப்பாளரும், இயக்குனருமான சி.வி.குமார் இயக்கி படப்பிடிப்பை தொடங்கி வைத்தார். அருண், நிரஞ்சனா ஜோடியாக நடிக்கின்றனர். மற்றும் விஜய் டியூக், ஷிமோர் ரூஸ்வெல்ட் நடிக்கின்றனர். தான் இயக்கிய சில படங்களில் ஓரிரு காட்சியில் மட்டுமே நடித்துள்ள சீனு ராமசாமி, இப்படத்தில் முக்கிய கேரக்டரில் நடிக்கிறார். அவர் சம்பந்தப்பட்ட காட்சிகள் சில நாட்களுக்கு முன்பு படமாக்கப்பட்டது. புதிய சமுதாய மாற்றத்துக்கான வழிகாட்டியாக இப்படம் அமையும் என்று விஜய் கார்த்திக் சொன்னார். பாதிக்கப்பட்டவர்களின் பக்கம் நிற்பதே சமூக நீதி என்ற கருத்தை ஆழமாகவும், அழுத்தமாகவும் இப்படம் பதிவு செய்யும் என்றும் அவர் சொன்னார். சென்னையை தொடர்ந்து விழுப்புரம், கோவை, பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் படப்பிடிப்பு நடக்கிறது. ஏ.எஸ்.சூரியா ஒளிப்பதிவு செய்ய, எஸ்.ஆர்.ஹரி இசை அமைக்கிறார். எஸ்.ஸ்ரீராம் இணைந்து தயாரிக்கிறார்.

# உலக கோப்பை கிரிக்கெட் வர்ணனையாளர் குழுவில் தரமான ஸ்பின்னர் ஒருவர்கூட இல்லை: சிவராமகிருஷ்ணன் குற்றச்சாட்டு



இந்தியகிரிக்கெட்அணியின்முன்னாள்சுழற்பந்துவீச்சாளர்லட்சுமணன்சிவராமகிருஷ்ணன் டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

"இந்தியாவில் நடைபெறும் இந்த உலகக்கோப்பை தொடரின் வர்ணனையாளர் குழுவில் ஒரு தரமான ஸ்பின்னர்கூட இல்லை. அப்படியானால் எப்படி மக்கள் சுழல் பந்து வீச்சை பற்றி தெரிந்து கொள்வார்கள். எனவே பேட்ஸ்மேன்களுக்கும் சில வெள்ளையான வர்ணனையாளர்களுக்கு மட்டுமே எல்லாம் தெரியும் என்பது போல் இந்த பரிதாபமான கலவை உருவாக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். அதற்கு ஒரு ரசிகர், ஒருவேளை சமீப காலங்களில் இந்திய பேட்ஸ்மேன்கள் ஸ்பின்னர்களுக்கு எதிராக தடுமாறுவதால் இப்படி இருக்கலாம். இருப்பினும் ஆரம்பகட்ட விக்கெட்டுகள் விழுந்தால் அதை பேட்டிங்கில் கணிசமாக சரி செய்யக்கூடிய அஸ்வினை நாம் தேர்ந்தெடுத்துள்ளோம்.

இம்முறை பிட்ச்கள் ஃபிளாட்டாகவும் சுழலுக்கு சாதகமாகவும் இருக்காது, என தெரிவித்துள்ளார். அதற்கு சிவராமகிருஷ்ணன் "இந்திய மண்ணில் இருக்கும் பிட்ச்கள் டெஸ்ட் கிரிக்கெட்டில் அஸ்வின் அதிக விக்கெட்டுகளை எடுக்க வேண்டும் என்பதற்காக வேண்டுமென்றே சுழலுக்குசாதகமாகஉருவாக்கப்படுகின்றன.அதனாலேயேஇந்தியபேட்ஸ்மேன்கள்சுழலுக்குஎதிராகதடுமாறுகின்றனர்.வேண்டுமானால் தென்னாப்பிரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் அஸ்வினின் ரெக்கார்டை எடுத்துப் பாருங்கள், என பதில் அளித்துள்ளார்.

# ஆசிய விளையாட்டு போட்டி: துப்பாக்கி சுடுதல் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்றது இந்திய மகளிர் அணி



ஆசிய விளையாட்டு போட்டி துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்திய மகளிர் அணி வெள்ளி பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது. 50மீ துப்பாக்கி சுடுதல் டிராப் போட்டியில் இந்திய மகளிர் அணி 337 புள்ளிகள் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றது.

சீனாவில் ஹாங்சோவ் நகரில் 19ஆம் ஆசிய சாம்பியன் விளையாட்டு போட்டிகள் கடந்த மாதம் (செப்டம்பர்) 23ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. 8ஆம் நாளான இன்று நடைபெற்ற போட்டிகளில் கோல்ப் விளையாட்டில் இந்தியா சார்பாக கலந்துகொண்ட அதிதி அசோக் வீராங்கனை வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

மற்ற தகுதி சுற்று போட்டிகளில் முதலிடத்தில் இருந்து வந்த அதிதி அசோக் , இறுதி போட்டியில் சற்று தடுமாறியதால் 2ஆம் இடமே பெற்றார். பெண்கள் ஒற்றையர் கோல்ப் பிரிவில் அதிதி அசோக் வெள்ளிப்பதக்கம் வென்றார். தாய்லாந்தின் யுபோல் அர்பிச்சாயா அதிதி அசோக்கை முந்தி முதலிடம் பிடித்து தங்கப்பதக்கம் வென்றார். கோல்ப்விளையாட்டில்இந்தியாவுக்குமுதல்பதக்கத்தைஅதிதிஅசோக்பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆசிய விளையாட்டுப் போட்டி: குண்டு எறிதல் பிரிவில் தங்கம் வென்றார் இந்திய வீரர் தஜிந்தர் பால் சிங் தூர்



ஆசிய விளையாட்டுப் போட்டியில் குண்டு எறிதல் பிரிவில் இந்திய வீரர் தஜிந்தர் பால் சிங் தூர் தங்கம் வென்றார். ஆசிய விளையாட்டு போட்டியில் இந்தியாவுக்கு 13வது தங்கம் கிடைத்துள்ளது. ஆசிய விளையாட்டு பதக்கப் பட்டியலில் இந்தியா 13 தங்கம், 15 வெள்ளி, 16 வெண்கலத்துடன் 4வது இடத்தில் உள்ளது.

# ஆசிய விளையாட்டு போட்டியில் இந்தியாவுக்கு மேலும் ஒரு தங்கம்




ஆசிய விளையாட்டு போட்டியில் ஆடவர் 3,000 மீட்டர் ஸ்டீபின்சேஸ் போட்டியில் இந்திய வீரர் அவினாஷ் சாபில் தங்கம் வென்றார். ஸ்டீபிள்சேஸ் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற முதல் வீரர் என்ற பெருமையை அவினாஷ் சாபில் பெற்றார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.